செ.கு.எண் : 85 நாள் : 16.10.2022

மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி அவர்கள் இன்று (16.10.2022) சென்னையில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி

இன்று ஒன்றிய உணவு மற்றும் மாண்புமிகு நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. பியூஸ் கோயல் அவர்கள் காலையில் அவர்களது கட்சி நிகழ்ச்சியில் கலந்துகொண்ட சமயத்தில், தமிழ்நாட்டிற்கு நாங்கள் தரமான அரிசியை தந்துகொண்டிருக்கிறோம். ஆனால், தமிழகத்தில் ஆட்சி செய்கின்ற அரசு, பொதுமக்களுக்கு தரமில்லாத அரிசியைத் தருவதாக ஒரு குற்றச்சாட்டை கூறியுள்ளார்கள். இன்றைக்கு தொலைக்காட்சியில் வந்திருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவர்கள் கொடுக்கின்ற அரிசி தரமானதாக இருக்கிறது என்று சொல்கிறார்கள், அந்த அரிசி எப்படி தரமில்லாததாகப் போகும் என்பதை நான் உங்கள் யூகத்திற்கு விட்டுவிட கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, இன்றைக்கு அதாவது ஞாயிற்றுக்கிழமை அங்காடிக்கு எல்லாம் விடுமுறை. ஆனால் எந்தக் கடைக்கும் சென்று பார்க்கவில்லை. பாரதிய ஜனதா கட்சிக்காரர்கள் அரசாங்கத்தை குற்றம் சொல்லவேண்டும் என்பதற்காக எப்போதுமே உண்மைக்குப் புறம்பாகத்தான் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அங்காடிக்கு சென்று பார்க்காமலேயே தமிழ்நாட்டிலுள்ள பாரதிய ஜனதா கட்சிக்காரர்கள் அந்தக் கருத்தை அமைச்சரிடத்தில் சொல்லி அவரைப் பேச வைத்திருக்கிறார்கள். இது எங்களுக்கு மிகுந்த வருத்தம் அளிக்கிறது. குறிப்பாக அமைச்சர் அவர்கள் இன்று மாலை 4.00 மணிக்கு எங்கள் துறையின் செயலாளர், எங்கள் துறையின் ஆணையர், நிர்வாக இயக்குநர் ஆகியோரை வரவழைத்து கூட்டம் நடத்துகிறார். கூட்டம் நடத்துகின்ற சமயத்தில், எப்படி இப்படி தரமில்லாத அரிசியை கொடுக்கிறார்கள் என்று சொல்கிறார்களே என்று கேட்டிருக்கலாம். ஆனால், தமிழகத்தில் ஏற்கனவே 376 அரிசி ஆலைகள் இருந்தன. இன்றைக்கு

தமிழகத்தில் 712 ஆலைகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சொந்தமான ஆலையில், தரமான அரிசியை நாங்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு இந்திய உணவுக் கழக அதிகாரிகள், எங்களுடைய சிவில் சப்ளைஸ் கிடங்குகளாக இருந்தாலும் சரி, தனியார் அரிசி அரைக்கின்ற முகவர்கள் ஆலைக்கும் சென்று அரிசி முழுவதும் தரமாக இருக்கின்றதா என்று சோதனை செய்கிறார்கள். இந்திய உணவுக் கழகம் அரிசி எப்படி இருக்க வேண்டும், அரிசி அளவு குறியீடு எப்படி இருக்க வேண்டும் என்பதை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அதன்படி இருந்தால்தான், அந்த அரிசியை கிடங்கிற்கு அனுப்ப வேண்டும் என்று இந்திய உணவுக் கழக அதிகாரிகள் கண்காணித்து வருகிறார்கள். அப்படி இருக்கின்ற சமயத்தில், எப்படி தரமில்லாத அரிசியை பொதுமக்களுக்கு வழங்க முடியும்?

அரிசி என்பது தமிழ்நாட்டில் இருக்கின்ற 2 கோடியே 23 லட்சம் மக்களுக்கு மாண்புமிகு முதலமைச்சரின் அரசு பொறுப்பேற்றதற்குப் பின்பு, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கும், ரூபாய்க்கும் வழங்கி இன்றைக்கு இந்தியாவிலேயே பொது விநியோக திட்டத்தில், சிறப்பு பொது விநியோக திட்டத்தைக் கொண்டுவந்து நாங்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். இப்படி இருக்கும் நேரத்தில், மாண்புமிகு ஒன்றிய அமைச்சர் அவர்கள் சொன்னது எங்களுக்கு வருத்தம் அளிக்கிறது. அதேபோல, கடந்த ஜூன் மாதம் இறுதியில், ஒரு நிகழ்ச்சிக்கு கோயம்புத்தூர் வந்திருந்தார். நானும் எங்களுடைய முதன்மைச் செயலாளர் அவர்களும் அந்த நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தோம். அங்கே நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு, தமிழ்நாட்டில் எப்படி நியாய விலைக்கடைகள் செயல்படுகிறது என்பதையெல்லாம் கேட்டார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் நியாய விலைக்கடைகளின் கட்டடங்கள் எல்லாம் குறிப்பிட்ட வடிவமைப்பில் இருக்க வேண்டும் என்று வடிவமைத்துக் கொடுத்து, கடைகள் 10 லட்சம் ரூபாயில் கடைகள் கட்டுவதற்கு அனுமதி

தந்திருக்கிறார். அந்தக் கடையைப் பார்த்துவிட்டு, இதே ஒன்றிய அமைச்சர் மிகவும் பாராட்டினார். நீங்கள் ஜுலை 5ஆம் தேதி டெல்லிக்கு வர இருக்கிறீர்கள், அப்போது இந்த கடையைப் பற்றி Power Point Presentation காண்பிக்க வேண்டும் என்று சொன்னார். நானும், துறையின் முதன்மைச் செயலாளரும் டெல்லிக்கு சென்றிருந்தோம். இந்திய அளவில் அன்றைக்கு நடைபெற்ற இந்தியாவிலுள்ள பல்வேறு மாநில உணவுத் துறை அமைச்சர்கள், உணவுத் துறை செயலாளர், அதிகாரிகள் எல்லாம் கலந்துகொண்ட கூட்டத்தில் முதன்மைச் செயலாளர் அவர்கள் Power Point Presentation போட்டு காண்பித்தார். அதைப் பார்த்து, தமிழ்நாட்டில் இப்படி கட்டியிருக்கிறார்கள், உண்மையிலேயே பாராட்டுக்குரியது என்று மாண்புமிகுஉணவுப் பாதுகாப்புத் துறை ஒன்றிய அமைச்சர் பாராட்டினார் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, 27.9.2022 அன்று சென்னை தி.நகர் பகுதியில் 4 பொது விநியோக கடைகளை பார்வையிட்ட ஒன்றிய அரசின் நுகர்வோர் பாதுகாப்பு உணவு மற்றும் பொது விநியோக திட்ட இணை அமைச்சர் மாண்புமிகு திரு. அஸ்வின் குமார் சௌபே அவர்கள் கடையிலிருந்த பொருட்களைப் பார்வையிட்டு, தரமான பொருட்கள் என்று தனது கருத்தை தெரிவித்துச் சென்றார். அதேபோன்று, அக்டோபர் முதல் வாரத்தில் தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம் மாவட்டத்திற்கு சுற்றுப்பயணம் செய்த பொது விநியோகத் திட்ட பணிகளையும், கடைகளையும் ஆய்வு செய்துவிட்டு ஒன்றிய அரசின் நுகர்வோர் பாதுகாப்பு உணவு மற்றும் பொது விநியோக திட்டத் துறையின் செயலாளர் அவர்கள், தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டத்தை நல்லமுறையில் செயல்பாட்டில் இன்றைக்கு இருக்கிறது, அது மிகுந்த பாராட்டுக்குரியது என்று பாராட்டியது எல்லாம் செய்தித்தாளில் வந்திருப்பதை நான் உங்களுக்கு காண்பிக்க விரும்புகிறேன்.

இன்றைக்கு ஒன்றிய அமைச்சர் மாண்புமிகு பியூஸ் கோயல் அவர்கள் கடையை பார்த்த பின்னர் பொருட்கள் தரமில்லை என்று சொன்னால்கூட நாம்

ஏற்றுக் கொள்ளலாம். இன்று ஞாயிற்றுக்கிழமை கடைக்கு விடுமுறை இருந்தும்கூட, கடையைப் பார்க்காமல், ஒரு பொதுக்கூட்டத்திற்குச் சென்று தமிழக அரசை குற்றம் சாட்ட வேண்டுமென்ற எண்ணத்தில் சொல்லியிருப்பது எங்களுக்கு மிகுந்த வருத்தம் அளிக்கிறது.

இன்றைக்கு அரசு பொறுப்பேற்று, இந்த துறையின் சார்பாக பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். குறிப்பாக, இந்திய உணவுக் கழக அதிகாரிகளும் அரிசி எப்படி இருக்கின்றது என்று சிவில் சப்ளைஸ் கிடங்குகளையும், தனியார் அரிசி ஆலைகளையும் பார்க்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், நாங்கள் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு, முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சொந்தமாக 306 சிவில் கிடங்குகள் இருக்கின்றன. அந்தக் கிடங்கிலிருந்து நியாய விலைக்கடைக்கு பொருட்கள் செல்கின்றன, அப்பொருட்கள் பொருட்களைத் தரமான பொருட்களா என்பதைப் பார்த்துவிட்டுத்தான் கடைக்கு அனுப்பவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 4 அதிகாரிகளை இன்றைக்கு அமைத்திருக்கிறார். அதற்கு Convenor ஆக மாவட்ட வழங்கல் அலுவலர், கூட்டுறவு இணைப் பதிவாளர், அதோடு எங்களுடைய RM. SRM, எங்களுடைய Quality Control அதிகாரி ஆகியோர் பார்வையிட்டு, அந்தப் பொருட்கள் தரமானதாக இருக்கிறது என்றால்தான், நியாய விலைக்கடைகளுக்கு கொண்டு செல்லப்படுகிறது. அப்படி அப்பொருட்கள் அந்த மாவட்ட ஆட்சித்தலைவரிடத்தில் காண்பித்து, மாவட்ட ஆட்சித்தலைவர், அது சரியாக இல்லை என்றால், அப்பொருட்கள் திருப்பி அனுப்பப்படுகிறது என்பதைத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் 38000 நியாய விலைக்கடைகள் இருக்கின்றன. இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு விவசாயிகள், தாங்கள் உற்பத்தி செய்த நெல்லை உடனடியாக வாங்க வேண்டும், வாங்கிய நெல்லை தரமாக அரைத்து, பொதுமக்களுக்கு

தரமான அரிசி வழங்க வேண்டும் என்ற உத்தரவை வழங்கி இன்றைக்கு ஒரு பொற்கால ஆட்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார். எனவே, இன்றைக்கு ஒன்றிய அரசின் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் அவர்கள், இன்றைக்கு கடையையே பார்க்காமல், அவர்களது கட்சிக்காரர்கள் சொன்ன கருத்தை பொதுக்கூட்டத்தில் கூறியிருப்பது உண்மையிலேயே எங்களுக்கு வருத்தம் அளிக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இந்திய வாணிபக் கழகத்தின் ஒரு ஏஜென்ட். இந்திய வாணிபக் கழகத்திலிருந்து நெல்லை வாங்கி அரிசியை அரைத்தாலும் அவர்களிடத்தில் தான் கொடுக்கிறோம். இந்திய உணவுக் கழகம் தான் அதற்குப் பொறுப்பு. அவர்களிடத்திலிருந்துதான் அரிசி வாங்குகிறோம். முன்னுரிமை அற்ற கார்டுகளுக்கு நாம் கொடுக்கிறோம். இருந்தாலும், தமிழ்நாட்டில் மாதந்தோறும் தேவைப்படும் அரிசி 3 இலட்சத்து 24 ஆயிரம் மெட்ரிக் டன். அதை நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்திய உணவுக் கழகத்தின் Control-ல் தான் தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் இருக்கிறது. இந்திய வாணிபக் கழகம் அனைத்து கிடங்குகளையும் மற்றும் அனைத்து தனியார் mill-களையும் வந்து பார்த்து, அந்த அரிசி தரமில்லை என்றால், அந்த black list-ல் சேர்த்தச் சொல்லி எங்களுக்கு பரிந்துரைக்கப்படுகிறது. எனவே, ஒரு தவறான குற்றச்சாட்டு சொல்வது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல. ஏனென்றால், அரிசியைப் பொறுத்தவரை 2 கோடியே 23 இலட்சம் மக்கள் இதை வாங்கி சாப்பிடுகிறார்கள். ஒரு அமைச்சர், ஒரு கடையை பார்த்தபின் இவ்வாறு கூறியிருந்தால், அதற்கு உண்மையிலேயே நாங்கள் பொறுப்பேற்றுக் கொள்கிறோம்.

கேள்வி: அமைச்சர் என்ன நோக்கத்திற்காக இப்படி பேசியிருக்கிறார்கள்?

பதில்: அவர்கள், அரசியல் வேண்டும் என்பதற்காக இப்படி பேசியிருக்கிறார்கள். மாதாமாதம் 30 அமைச்சர்களை தமிழ்நாட்டிற்கு வரச் சொல்லப் போகிறேன் என்றும்,

அனைத்துத் துறைகளையும் ஆய்வு செய்யப் போகிறோம் என்று திரு.அண்ணாமலை பேசியிருக்கிறார். ஏனென்றால், விரைவில் நாடாளுமன்றத் தேர்தல் வருகின்றது, அதனால் அரசியல் செய்ய வேண்டும் என்று பார்க்கிறார்கள்.

கேள்வி: அரிசி கொடுக்கின்ற திட்டம் திமுக கொண்டுவந்த திட்டம். ஆனால், ஒன்றிய அரசு கொடுக்கின்ற அரிசியைத் தான் கொடுப்பதாக அவர்கள் கூறுகிறார்கள் என்றும், இந்த திட்டத்தை அவர்கள் தான் செயல்படுத்துவது போன்று கட்டமைக்கிறார்களே?

பதில்: அப்படியல்ல. நாம் விலைக்கு வாங்கி, நம் அரசாங்கம் நிறைய செலவை ஏற்றுக் கொள்கிறதே. அவர்கள் ஒரு விலைக்கு கொடுக்கிறார்கள், OMS-ல் 20 ரூபாய்க்கு நாங்கள் வாங்குகிறோம். ஒரு கிலோ அரிசியை உற்பத்தி செய்வதற்கு 38 ரூபாய் செலவாகிறது. அதில் மாநில அரசு நிறைய பங்கெடுத்துக் கொள்கிறது. உணவுக்கு மானியமாக மாண்புமிகு முதலமைச்சர்கள் அவர்கள் 7500 கோடி ரூபாய் அறிவித்திருக்கிறார். அதைவிட சென்ற ஆண்டு கூடுதலாக போனது. ஏனென்றால், தேர்தல் சமயத்தில் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் குடும்ப அட்டைக்கு 4000 ரூபாய் கொடுப்போம் என்று நாங்கள் பொறுப்பேற்றவுடன் கொடுப்போம் என்று கூறி, பொறுப்பேற்றவுடன் 2 கோடியே 9 இலட்சம் பேருக்கு 4000 ரூபாய் வழங்கினார். இந்த ஆண்டு 7500 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார், இன்னும் கூடுதலாகத் தான் செலவாகும்.

சிறப்பு பொது விநியோகத் திட்டம் இங்கு இருக்கிறது, இந்தியாவில் எங்கும் இல்லை. அதையும் ஒன்றிய அமைச்சர் பாராட்டினார். அரிசி, சர்க்கரை, பாமாயில் ஆகியவை நாங்கள் open market-ல் வாங்கி குறைந்த விலைக்கு கொடுக்கின்றோம். இது தலைவர் கலைஞர் அவர்கள் 2007 ஆம் ஆண்டு கொண்டுவந்த திட்டம். அரிசி மட்டும் கொடுக்கக்கூடாது, அரிசியில் கார்போஹைடிரேட் அதிகமாக இருப்பதால் புரதச் சத்தும் கொடுக்க வேண்டும்

என்ற காரணத்தால், அன்றைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் 2007 ஆம் ஆண்டு சிறப்பு பொது விநியோகத் திட்டத்தைக் கொண்டு வந்தார். இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு நிதி நெருக்கடி இருந்தாலும், அதைத் தொடர்ந்து செயல்படுத்த வேண்டும் என்று செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்.

கேள்வி: ஏற்கனவே தமிழகம் நெல் உற்பத்தியில் உபரி மாநிலமாக இருந்தது… எவ்வளவு கொள்முதல் செய்யப்படுகிறது?

பதில்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுபேற்றபோது, சென்ற ஆண்டு கொள்முதல் செய்தது 45 இலட்சம் மெட்ரிக் டன், இந்த ஆண்டு 5 இலட்சத்து 80 ஆயிரம் மெட்ரிக் டன் இதுவரை கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டும் அந்த அளவிற்கு வரும் என்று எதிர்பார்க்கிறோம். ஏனென்றால், டெல்டா மாவட்டத்தைவிட, டெல்டா மாவட்டம் அல்லாத இடங்களில் விவசாயிகள் நெல்லை அதிகமாக பயிர் செய்கிறார்கள். கடந்த ஆட்சியில் சன்ன ரகத்திற்கு 1600 ரூபாய்தான் விலை இருந்தது. ஆனால் இன்றைக்கு இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், குவின்டாலுக்கு 2160 ரூபாய் தருகிறார். அதேபோல, பொது ரகத்திற்கு 1945 ரூபாய் இருந்தது, இன்றைக்கு 2015 ரூபாய் கொடுக்கிறார். அதனால் விவசாயிகள் அதிகமாக நெல்லை பயிரிடுகிறார்கள். அதேபோல் விவசாயிகளுக்கு, அவர்களது நெல்லை DPC-க்கு போட்டால், RM, SRM அந்த bill-ஐ உடனடியாக சமர்ப்பித்தால் 2 நாட்களில் அந்தப் பணத்தை அனுப்பிவிடுகிறோம். இப்படியெல்லாம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். எனவே, பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்ற பொருளைப்பற்றி அவர் பார்க்காமலேயே சொன்னது மிகுந்த வருத்தமளிக்கிறது.

கேள்வி: நெல்பொருள் ஈரப்பதத்தை மத்தியக்குழு இன்றைக்கு ஆய்வு செய்திருக்கிறது…

பதில்: விவசாயிகளும், விவசாய சங்கப் பிரதிநிதிகளும் ஈரப்பத்தை 17 சதவீதத்திலிருந்து 22 சதவீதம் உயர்த்தவேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனே ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுத வேண்டுமென்று கூறினார். கடிதம் எழுதி, அதை நேற்றைக்கு முன்தினமே அதிகாரிகள் தஞ்சாவூருக்கு வந்து 6 இடங்களில் பார்த்தார்கள், இன்றைக்கு காலையில் நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய இடங்களை பார்த்தார்கள். திருச்சியும் பார்க்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள், பார்க்கும்போது எல்லா இடங்களிலும் ஈரப்பதம் கூடுதலாகத்தான் இருக்கிறது. அதனால் கண்டிப்பாக நாங்கள் ஒன்றிய அரசிற்கு பரிந்துரைப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

கேள்வி: கடந்த ஆட்சிக்காலத்திலும் மத்திய அமைச்சர்கள் தமிழக திட்டங்களை ஆய்வு செய்தார்கள், இப்போது தொடர்ந்து ஆய்வு செய்கிறார்கள், தமிழக அரசு இதை அனுமதிக்குமா?

பதில்: அதாவது, ஒவ்வொரு துறைகளிலும், சில திட்டங்களை தமிழக அரசே செயல்படுத்துகிறது, சில திட்டங்களுக்கு மாநில அரசு மற்றும் மாநில அரசின் பங்கு இருக்கின்றது. திமுக அரசு பொறுப்பேற்றதற்குப் பின் தமிழ்நாட்டிற்கு வேண்டிய திட்டங்களில் அவர்களது நிறைய கொள்கைகளை நாம் எதிர்க்கிறோம், அதற்காக அவர்கள் இன்றைக்கு குற்றம் சாட்டுவதற்காக சொல்கிறார்கள்.

கேள்வி: பொங்கல் பரிசு வழங்கியதில் கூட ….

பதில்: அவர்கள் சொன்னார்கள். தமிழ்நாட்டில் 38000 நியாயவிலைக் கடைகள் இருக்கின்றன. பொதுமக்கள் யாரும் அந்த கடைகளில் பொருட்கள் தரமானதாக இல்லை என்று சொல்லவில்லை. திருப்பத்தூர் மாவட்டத்தில் மட்டும் இந்தப் பிரச்சனை வந்தது. அது ஜுனியர் விகடன் பத்திரிகையில் செய்தி வந்தது. உடனே அந்தப் பொருட்கள் எல்லாம் மாற்றித் தரப்பட்டது. உடனடியாக தர கட்டுப்பாட்டு

அதிகாரி பணிநீக்கம் செய்யப்பட்டார். அதேபோல, மாநில அளவில் இருக்கும் தர கட்டுப்பாட்டு அதிகாரி தகுதிநீக்கம் செய்யப்பட்டார்.

குற்றம் சொல்லக்கூடியவர்கள் தமிழ்நாட்டில் மற்ற இடங்களில் நியாயவிலைக் கடைகளில் சென்று பார்த்துவிட்டு, இந்தப் பொருள் தரம் இல்லை என்று சொல்லியருந்தார்கள் என்றால் நாங்கள் அதை ஏற்றுக்கொள்கிறோம். பொதுமக்கள் எங்கும் சொல்லவில்லை. மேலும், வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது, இதற்கு மேல் நான் கூற விரும்பவில்லை.

கேள்வி: ரேஷன் கடைகளில் பிரதமரின் புகைப்படம் வைக்கவில்லை என்ற பிரச்சனை எழுகிறது, கடந்த காலங்களில் அது இருந்ததா?

பதில்: 2014-லிருந்து பாரதிய ஜனதா கட்சி இப்போது மத்தியில் ஆட்சியில் இருக்கிறது. இப்போது திமுக ஆட்சி வருவதற்கு முன்பு எந்தக் கடையிலும் வைக்கவில்லை. எங்கெங்கு வைக்க வேண்டுமோ மத்திய அரசாங்கத்தில் பிரதம மந்திரியின் புகைப்படம் வைத்திருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தில் காந்தியின் படம் வைத்திருக்கிறார்கள். அதே சமயம், மாநில அரசாங்கம் நிதி கொடுக்கிறது. ஏன் முதலமைச்சர் படத்தை வைக்கலாம் அல்லவா? வைப்பதற்கு ஏன் அனுமதி தருவதில்லை?

கேள்வி: பிரதம மந்திரி புகைப்படத்தை ரேஷன் கடைகளில் வைக்க வேண்டிய அவசியம் ….

பதில்: அவர்கள் நிறைய இடங்களில் பிரச்சனை செய்து கொண்டிருக்கிறார்கள். ஏன், பஞ்சாயத்து அலுவலங்களில், அரசு அலுவலகங்களில் வைக்கிறார்கள்.

கேள்வி: பிரதம மந்திரி புகைப்படத்தை வைக்க வேண்டிய அவசியம் இருக்கிறதா? இல்லையா?

பதில்: எங்கெங்கு வைக்க வேண்டுமோ, அங்கு ஒன்றிய அரசு வைக்கிறது, அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சியில் கண்டிப்பாக வைப்போம். இப்போது செஸ் ஒலிம்பியாட் போட்டி நிகழ்ச்சியில் கலந்து கொண்டார், அவர் புகைப்படத்தை

வைத்து, முதலமைச்சர் அவரை கௌரவப்படுத்தினார். செய்தித்தாள்களிலும் விளம்பரப்படுத்தினார்.

**கேள்வி:** மத்திய அரசும், மாநில அரசும் பல திட்டங்களை ஒன்றிணைந்து செய்துகொண்டிருக்கிறார்கள். உலக அளவில் பசி குறியீட்டில் இந்தியா மிக மோசமான நிலையில் இருக்கிறது என்று சொல்கிறார்கள்...

**பதில்:** ஆமாம், 125வது இடத்திற்கு போயிருப்பதாக இன்றைக்கு ஒரு செய்தி வந்திருக்கிறது.

**கேள்வி:** இலங்கையை விட பின்தங்கி இருப்பதாகச் சொல்கிறார்கள், இது எதனால் நடக்கிறது?

**பதில்:** இந்தியாவைப் பொறுத்தவரை இந்த ஆண்டு பீஹார், மேற்கு வங்காளம், உத்தரப்பிரதேசம் எல்லா இடங்களிலும் இப்போது நெல் உற்பத்தி இல்லை. ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, வறுமையில் இருக்கக்கூடிய அளவு இன்றைக்கு நான்கே சதவீதம் தான்.

- - - - -

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in